# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 76 — 1973 සැප්තැම්බර් 07 වැනි සිකුරාදා — 1973.09.07

76 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II அ) — விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் — வெற்றிடம் ... ... ... | 903 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் ... | 910 |


## பதவிகள் — வெற்றிடம்

**இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்**

### 1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள்

**1 : 1** விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். "இலங்கையர்" என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

**1 : 2** ஏதாவது ஒரு பதவிக்கான வேட்பாளர், அப் பதவிக்கு சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனிலும் உயர்வான பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆகக் குறைந்த கல்வித் தகைமையென விதிக்கப்பட்டிருக்குமிடத்து, சிங்கள மொழி மூலம் கல்வி பயின்ற சிங்களவராக இருப்பின் அவர் சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (1961 ஜனவரி 1 க்கு முந்திய ஒரு திகதியிலிருந்து அரச சேவையில் இருப்போருக்கும் அரச சேவையில் உள்ள பிற பதவிகளுக்கு நியமனத்தை நாடும் அத்தகையோருக்கும் இத் தேவை ஏற்புடைத்தாகாது.)

**1 : 3** விதிக்கப்பெற்ற சிங்கள வினைத்திறமைத்திறன் தேர்வினில் சித்தி எய்தத் தவறியமைக்காக தகுதிகாண்/சோதனைக்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட "புதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் நியதிகளுக்கமைவாக விதிக்கப்பெற்ற உயர்ந்த சிங்கள வினைத்திறன் தேர்விலிருந்து விலக்களிக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கத்தக்க தகைமையை அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

### 2. படிகள்

**2 : 1** அரச சேவையில் உள்ள திருமணமான உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பதவிகளுக்கு ஏற்புடைய திரட்டிய மாத வேதனத்துடன் மேலதிகமாக தாபனக் கோவையின் vii ஆம் அத்தியாயத்தின I ஆம் பிரிவில் தரப்பட்டபடி விவாகப் படியும் வழங்கப்படும்.

**2 : 2** மாத வேதனம் பெறும் அரச உத்தியோகத்தர்கள், அவர்கள் 180 ரூபாவிலிருந்து 250 ரூபா வரையில் (சகல படிகளும் உட்பட) வேதனமாக/கூலியாகப் பெறும் தொகுதியினரைச் சேர்ந்தவராகின், அவர்களுக்கு விசேட படியாக ரூபா 7.50 கொடுக்கப்படும். அது தேவையானவிடத்து சரிசெய்யப்படுவதற்கு உள்ளாகும்.

---

**முக்கிய அறிவித்தல்**

*இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
**கொழும்பு,**
*1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.*

**3. சேவை நிபந்தனைகள் : பொது**

**3 : 1** நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள், ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

**3 : 2** அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

**3 : 3** அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**4. நிரந்தரப் பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைத்தாகும் சேவை நிபந்தனைகள்**

**4 : 1** நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே **3** ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :—

**4 : 1 : 1** சகல நியமனங்களும், ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய, மூன்று வருடத்துக்குத் தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

**4 : 1 : 2** அரசாங்க சேவையில் "புதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்கள் யாவரும் அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக **1956** ஆம் ஆண்டின் **33** ஆம் இலக்க அரசகரும மொழிச் செய் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தற்போதுள்ள எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு பயன் ஏற்படும் வண்ணம் இனி மேல் புகுத்தக்கூடிய சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமையுமாறு வேண்டப்படுவர்.

**4 : 1 : 3** சகல அரச உத்தியோகத்தர்களும், தமது தகுதிகூர் காலத்தின்போது அரசகரும மொழியில் வேலை செய்யும் அறிவைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

**4 : 1 : 4** தகுதிகூர் காலம் நிறைவு எய்திய பின்பு பதவியை உறுதி செய்வது, பிறவற்றுள் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முதலாவது வருடத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் இரண்டு வருடத்தினுள் இரண்டாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடத்தினுள் மூன்றும் தரச் சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் தங்கியுள்ளது. ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம், விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது **4 : 1 : 5** ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும் அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

**4 : 1 : 5** தகுதிகூர் நிலைக்கால முடிவு வரையில் சிங்கள மொழியில் விதிக்கப்பெற்ற வினைத்திறனை அடையாவிட்டால் தாபனக் கோவையின் **II** ஆம் அத்தியாயத்தின் **12 : 13** ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரயோகமாகும்.

**4 : 1 : 6** சிங்கள மொழி மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் மீது **4 : 1 : 3** ஆம் **4 : 1 : 4** ஆம் **4 : 1 : 5** ஆம் பிரிவுகள் பிரயோகிக்கப்படமாட்டா.

**4 : 1 : 7** அரச சேவையின், நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதி செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்கவேண்டியதில்லை.

**4 : 1 : 8** தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அறிவதற்கு அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவ பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**5. நியமன நியதிகள்**

**5 : 1** அரச சேவையில், நிரந்தரமான பதவிகளிலாயினும் மாதச் சம்பளமுள்ள தற்காலிக பதவிகளிலாயினும் **1.1.72** க்குப் பின்பு நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் (நாட் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள் நீங்கலாக) யாவரும் தமது திரட்டிய வேதனத்தின் **6** சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் நிதியாண்டின் இறுதியில் கொடுக்கப்படும் திரட்டு வேதனத்தின் **9** சத வீதத்தைக் கொடுத்துதவும். அத்தகைய பதவியை வகிப்பவர் (அவர் விரும்பினால்) அவரது மாதத்திரட்டு வேதனத்திலிருந்து **6** சத வீதம் வரையில் அவரது விருப்பப்படி, சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்தலாம். ஆனால் அத்தகைய உதவு தொகை மீது அரசாங்கம் எந்தவித தொகையும் செலுத்தாது.

**5 : 2** **1971.12.31** க்கு முன்பு அரச சேவையில் ஓய்வூதியமுள்ள நிரந்தரமான பதவிகளை வகித்த அரச உத்தியோகத்தர்கள் **1972.1.1** க்குப் பின்பு அச்சேவையில் உள்ள நிரந்தரமான பதவிகளில் நியமிக்கப்பட்டால் அவர்கள் அவர்களது ஓய்வூதிய உரிமைகளை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படுவார். அத்தகைய அரச உத்தியோகத்தர்கள் [illegible] விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

**6. யுத்த சேவைச் சலுகை**

**6 : 1** ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப் படைகளில் சேவையாற்றியவர்களும், தொண்டர் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காது

விடின், 1939 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் உள்ள அச் சேவைக் காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன், அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருத்தல் வேண்டும்.

**7. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்**

**7 : 1** எல்லாத் தகைமைகளேயும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

**7 : 2** வேட்பாளர்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

**7 : 3** ஒரு வேட்பாளரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினுல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய வேட்பாளரைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

**7 : 4** விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப் பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவு செய்யப்பட்ட பின்பு அப் பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

**7 : 5** விளம்பரத் தேவைகளுக்கு அமைவுபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**8. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை**

**8 · 1** தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும்; அதில், பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

பொலிஸ் திணைக்களம்

*பொலிஸ் கொஸ்தாப்புச் சாரதிகள் பதவிக்கு, ஆட்சேர்ப்பு*

*பொலிஸ் கொஸ்தாப்புச் சாரதிகள் பதவிக்கு ஆட்சேர்ப்பு பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*2. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டு ஆட்சேர்ப்பு அதிகாரி, பொலிஸ் ஆட்சேர்ப்புக் காரியாலயம், புதிய துறைமுக மேடை, கொழும்பு 1 என்ற முகவரிக்கு 73.10.20 ஆம் திகதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தை அடக்கியுள்ள கடித உறையின் இடது கைப்புற மேல் மூலையில் "பொலிஸ் கொஸ்தாப்புச் சாரதிகள் பதவிக்கான விண்ணப்பம்" என எழுதப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.*

*3. சம்பள அளவுத் திட்டம்.—வருடமொன்றுக்கு ரூபா 3,000—90 × 3—3,270—3,432—144 × 14—5,448 (திரட்டிய சம்பளம்)*

*4. **வேண்டப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்வருவனவற்றை தகுந்த ஆதாரங்களுடன் நிறுவ வேண்டும் :—*

*(i) 73.10.20 ஆம் திகதியன்று 22 வயதிற்குக் குறையாதவராயும் 30 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாடு திணைக்கள ஊழியர்களுக்குப் பொருந்தமாட்டா.*

*(ii) சிங்களம்/தமிழ் அல்லது ஆங்கிலத்தில் கல்வித் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் குறைந்தது 7 ம் வகுப்புச் சித்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்கத்தில் கடமையாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு இக் குறைந்தபட்சக் கல்வித் தகைமைக் கட்டுப்பாடு பொலிஸ் தலைவரின் தற்றுணிபில் தளர்த்தப்படும்.*

*(iii) **தொழில்நுட்பத் தகைமைகள்***

*(அ) குற்றங்கள் எதுவுமற்ற வண்டி செலுத்தும் திறமைச் சான்றிதழை உடையவராக இருத்தல் வேண்டும்.*

*(ஆ) வாகனங்கள் செலுத்துவதற்கான உத்தரவுச் சீட்டைப் பெற்றபின் வாகனங்களைச் செலுத்துவதில் குறைந்தது 3 வருட அனுபவமாவது உடையவராக இருத்தல் வேண்டும்.*

*குறிப்பு.—மோட்டார் பொறி நுட்பத்தில் அறிவுள்ளவர்க்கும் எல்லாவிதமான மோட்டார் வாகனங்களையும் இயக்கத் தகுந்த வண்டி செலுத்தும் உத்தரவுச் சீட்டுப் பெற்றவர்களுக்கும் முதன்மையளிக்கப்படும்.*

*(iv) **மற்றைய தகைமைகள்***

*(அ) எல்லா விண்ணப்பதாரரும் இலங்கையராக இருத்தல் வேண்டும்.*

*(ஆ) விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும்.*

*(இ) உயரத்தில் 5 அடி 4 அங்குலத்திற்குக் குறைந்தவர்களாக இருத்தல் கூடாது.*

*(ஈ) உடற்றகுதியுடையவர்களாக இருத்தல் வேண்டும்.*

*(உ) **கண்பார்வை.**—ஒவ்வொரு கண்ணினுடைய பார்வையும் 6/12 க்குக் குறைவாக இருத்தல் கூடாது. ஒரு கண்ணினுடைய பார்வை 6/6 ஆக இருந்தால் மற்றைய கண்ணினுடைய பார்வை 6/18 ஆக இருந்தால் அது ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். **மூக்குக் கண்ணாடி பாவிப்பவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாக இருப்பார்கள்.***

*(v) யுத்த சேவைச் சலுகை.—29.1.58, 20.3.58 ஆம் திகதியிடப்பட்ட 427, 434 ஆம் நிறைசேரி சுற்றுநிருபங்களின்படி ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்கள், தியணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை என்பவற்றில் முழு நேரம் கடமையாற்றியவர்கள் ஆகியோர் வயது, கல்வித்தகைமை சம்பந்தமான சலுகைகளுக்கு உரிமையுடையவராக இருக்கின்றனர்.*

*5. விண்ணப்பகாரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை இணைக்க வேண்டும் :—*

*(i) பிறப்புச் சான்றிதழ் ;*
*(ii) அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள்*
*(iii) வண்டி செலுத்தும் உத்தரவுச் சீட்டு ;*
*(iv) கல்வித் தகைமைச் சான்றிதழ்.*

*6. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் வாகனங்களை ஓட்டுவதிலும், அதனைப் பராமரித்தலிலும் பரீட்சிக்கப்படுவர். அத்துடன் விதி ஒழுங்குகள் பற்றிய அறிவு, போக்குவரத்துச் சைகைமுறை, பரீட்சார்த்தி எந்தவிதமான வாகனங்களை செலுத்துவதில் வல்லுனரோ அவ்வாகனங்கள் பற்றிய ஆரம்ப பொறிநுட்பம் ஆகியவற்றிலும் பரீட்சிக்கப்படுவார்கள். இப்பரீட்சை மத்திய ஊர்திச் சாலையின் பொறுப்பதிகாரியினுல் நடாத்தப்படும்.*

*பரீட்சார்த்திகளிடம் எதிர்பார்க்கப்படும் ஒரேயொரு கல்வித் தகைமையான சிங்களம்/தமிழ் அல்லது ஆங்கிலத்தில் ஏழாந்தர அறிவு பற்றிய தகைமையை உறுதிப்படுத்த ஒரு பரீட்சை போக்குவரத்துத் தொடர்புகள் அதிபரினுல் நடாத்தப்படும்.*

*இலங்கையின் எப்பகுதியிலும் சேவை செய்யத் தகுந்தவர் என்று வைத்திய பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அங்கவீனத்தாலோ அல்லது வேறு சரீரக் குறைபாடுகளாலோ பாதிக்கப்பட்டிருப்பவராக இருந்தால் அக்குறைகள் வாகனங்களைத் திறமையாகச் செலுத்துவதற்குத் தடையாக இருக்குமாதலால் அவர் நியமனம் செய்யப்படமாட்டார். போக்குவரத்துத் தொடர்புகள் அதிபர் எல்லாவற்றிலும் தகுதிவாய்ந்த பரீட்சார்த்திகளை அவர்களுடைய சொந்தச் செலவில் அழைப்பித்து ஒரு நேர்முகப் பரீட்சையில் சாதாரண தேகக்கட்டு உடையவர்களா என்றும், இத்துறையில் தகுதி வாய்ந்தவர்களா என்றும் நிச்சயப்படுத்துவார்.*

மேற்கூறிய பரீட்சைகளின் முடிவில் இத்தேர்வுக்கென அமைக்கப்பட்ட சபையினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்குப் பின்னரும் பரீட்சார்த்திகளின் முற்கால வாழ்க்கை, குணதிசயம் ஆகியவை பற்றிய பொலிஸ் விசாரணைகளின் பின்பும் பரீட்சார்த்திகள் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

குறிப்பு.—பரீட்சைகளுக்கும், நேர்முகப் பரீட்சைகளுக்கும் அழைக்கப்படும் பரீட்சார்த்திகளுக்குப் போக்குவரத்துச் செலவுகள் வழங்கப்படமாட்டாது.

7. *நியமன நியதிகள்.*—இந்நியமனங்கள் நிரந்தரமானவை. நியமனம் பெறுவோர் மூன்று வருடங்களுக்கு சோதனைக்கால நிலையில் வைக்கப்படுவார்கள். இவர்கள் அரசாங்க சேவையாளர் சேமலாப நிதிக்குக் கட்டுப்பணம் செலுத்துவார்கள். 1.1.72 ஆம் திகதிக்கு முன்னர் இளைப்பாற்றுச் சம்பளத்தோடு கூடிய பதவிகளை வகித்தோர் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குத் தொடர்ந்தும் உரிமையுடையவர்களாக இருந்து விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டுப்பணம் செலுத்துவார்கள். எல்லாப் பொலிஸ் கொஸ்தாப்புச் சாரதிகளும் இணைக்கள நிதிகளுக்குக் கட்டுப்பணம் செலுத்தும்படி வேண்டப்படுவர்.

8. *சேவை நிபந்தனைகள்.*—(i) தபானக்கோவையின் 2 ம் அத்தியாயத்தின் 10 : 6 தொடக்கம் 10 : 14 வரையுள்ள உப தலைப்புக்கள் பொருத்தமுடையனவாகும்.

(ii) சோதனைக்கால/தகுதிகாண் கால நிலையிலுள்ளோர் தங்களது நியமனங்களில் உறுதிப்படுத்தப்படும்வரை விவாகஞ் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள். எனினும் 2 வருட திருப்திகரமான சேவையின் பின்பு புதிதாகச் சேர்ந்தோரால் விவாகஞ் செய்ய அனுமதி கோரி சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு பொலிஸ் அதிபரின் தற்றுணிபின்படி அனுமதி வழங்கப்படும்.

(iii) வாகனங்களை இயக்கச் செல்லாத நேரங்களில் அதிகாரத்திலிருக்கும் எந்தப் பொலிஸ் உத்தியோகத்தராலும் பணிக்கப்பட்டபடி வழமையான சிறு வேலைகளைச் செய்வதற்கு வேண்டப்படுவார்கள்.

(iv) (அ) 5 வாரங்களுக்கு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுப் பயிற்சி முடிவில் பின்வருவனவற்றில் தேர்ச்சியடைய வேண்டும் :—

(அ) வாகனங்களைச் செலுத்துதல்.

(ஆ) பொது வீதி விதிகள்.

(இ) மோட்டார் பொறிநுட்பம்—போதனை முறையும் செய்கை முறையும் பொலிஸ் மோட்டார் ஓட்டப் பாடசாலையில்.

(ஆ) ஒரு பொலிஸ் கொஸ்தாப்புச் சாரதிக்கு வாகனங்களை ஓட்டுதல், பராமரித்தல் ஆகியவற்றில் அளிக்கப்படும் பயிற்சிகளுடன் ஆரம்பப் பொலிஸ் கடமைகள், துப்பாக்கிகளைக் கையாளுதல் ஆகியவற்றிலும் பயிற்சியளிக்கப்படும்.

(v) தகுதிகாண்/சோதனைகால முடிவிலும் ஒவ்வொரு சம்பள வுயர்வுக்கு முன்பும் ஒவ்வொரு பொலிஸ் கொஸ்தாப்புச் சாரதியும் வாகனங்களைச் செலுத்துவதிலும், பராமரித்தலிலும் திருப்திகரமான தரத்தையுடையவராவெனப் பரிசோதிக்கப்படுவர்.

(vi) பொலிஸ் கொஸ்தாப்புச் சாரதிகள் 50 வயதை அடைந்த பின்னரும், அதன்பின் ஒவ்வொரு வருடமும் வாகனங்களைச் செலுத்துதல், பாவனை செய்தல் ஆகியவற்றிலுள்ள பொதுத் திறமை சம்பந்தமாக போக்குவரத்துத்துறை அதிபரினால் பரிசோதிக்கப்படுவார்கள். மேற்கூறிய பரீட்சைகளுடன் ஒரு வைத்திய பரிசோதனைக்கும் அவர்கள் ஆளாவார்கள்.

(vii) பொலிஸ் கொஸ்தாப்புச் சாரதிகள் பின்வரும் மாற்றங்களுக்கமைய பொலிஸ் கொஸ்தாப்புமார்களுக்குரிய சம்பளம், படிகள், அதிகாரங்கள், திணைக்களக் கட்டளைகள், நியதிச்சட்டங்கள் ஆகியவற்றில் இடப்பட்டுள்ள நியதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் உரிமையுடையவர்களாக இருப்பார்கள்.

(அ) வாகனங்களைச் செலுத்துதல், பொலிஸ் வாகனங்களைப் பராமரித்தல், கவனித்தல் ஆகியவைதான் பொலிஸ் கொஸ்தாப்புச் சாரதிகளுக்கும் அப்பதவியிலிருந்து உயர்ச்சி செய்யப்படுபவர்களுக்கும் முதலான கடமையாக இருக்கும். பொலிஸ் தலைவரின் தற்றுணிபின்பேரில் இப்பேர்ப்பட்ட கடமைகளில் இருந்து அவர்களுக்கு விலக்களிக்கப்படலாம்.

(ஆ) பொலிஸ் கொஸ்தாப்புச் சாரதி எவரொருவரோ அல்லது பொலிஸ் கொஸ்தாப்புச் சாரதிப் பதவியிலிருந்து உயர் பதவிக்கு உயர்ச்சி செய்யப்பட்டவரோ பொலிஸ் தலைவரினால் விசேடமாக விலக்களிக்கப்பட்டிருந்தாலன்றியோ அல்லது வாகனங்களைச் செலுத்த மருத்துவ ரீதியாக தகுந்தவரல்ல என்று ஒரு அரசாங்க வைத்திய அதிகாரியினால் மருத்துவச் சான்றிதழ் அளிக்கப்பட்டிருந்தாலன்றியோ வாகனங்களைச் செலுத்தும் கடமைகளைச் செய்ய மறுக்க முடியாது.

(இ) பொலிஸ் கொஸ்தாப்புச் சாரதிகள் உயர் பதவிக்கு உயர்ச்சி செய்யப்பட்ட பின்னரும், வாகனங்களைச் செலுத்துதல், வாகனங்களைச் செலுத்தும் கடமைகளுடன் தொடர்பான பயிற்சிக் கடமைகள், மேற்பார்வைக் கடமைகள் ஆகியவற்றையே செய்வதற்குத் தொடர்ந்தும் உபயோகப்படுத்தப்படுவார்கள். பொலிஸ் தலைவரின் திட்டமான அனுமதியின்றி அக்கடமைகளிலிருந்து நீக்கப்படமாட்டார்கள்.

9. *உயர்ச்சிகள்.*—தனது பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட பொலிஸ் கொஸ்தாப்புச் சாரதியொருவர் இறுதி மூன்று வருடங்களிலும் எந்தவிதமான விபத்துக்கும் ஆளாகாமல் இருப்பின் 5 வருடங்களுக்குப் பின் பதவியுயர்வுக்குத் தகுதியுடையவராக விருப்பார். பொலிஸ் கொஸ்தாப்புமார்களுக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகள் இல்லாதோருக்கு பதவியுயர்வுகள் மட்டுப்படுத்தப்பட்ட உயர்ச்சிக்கான திருத்தியமைக்கப்பட்ட ஒரு தகைமைப் பரீட்சையைத் தவிர்ந்து மற்றைய எல்லா விதங்களிலும் பதவியுயர்வு நடைமுறைகள் பொலிஸ் கொஸ்தாப்புமார்களுக்கு இருப்பனபோன்றே இருக்கும்.

10. நியமனம் பெறுபவர்களுக்கு பின்வரும் வசதிகள் அளிக்கப்படும் :—

(அ) இலவச குடிமனை ;

(ஆ) இலவச கோலவுடை ;

(இ) பெட்டி, படுக்கை சப்பாத்து அவைகளை சுத்திசெய்யும் உபகரணங்கள்.

11. ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுடைய விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்களூடாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

12. முடிவுத் திகதியின் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. மேற்குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

டி. எஸ். இ. பி. ஆர். சேனநாயக்க.

பொலிஸ் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 1, 24 ஆகஸ்ட் 1973.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

### பொலிஸ் கொஸ்தாப்புச் சாரதிகள்

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்துக்களில்) :———
(கட்டாயமாக விண்ணப்பதாரியின் பிறப்புச் சான்றிதழில் உள்ளபடி)

2. தகப்பனாரின் முழுப் பெயர் :———.

3. தகப்பனாரின் தொழில் :———.

4. விண்ணப்பதாரியின் பிறப்பிடம் :———.
பிறந்த இடத்திற்கு கிட்டிய பொலிஸ் நிலையம் :———.
மாகாணம் :———.

5. உயரம் :———.
மார்பு :———.
(இயற்கையான சுவாசம் விட்டநிலை)

6. பிறந்த திகதி :———.
——— ஆம் திகதியில் வயது :———.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

7. (அ) தேசிய இனம் :———.
(ஆ) பிறப்பினால் இலங்கைப் பிரசையா அல்லது பதிவு மூலமா :———.
(பதிவுமூலமாயின் பதிவுச்சான்றிதழின் பிரதி இணைக்கப்படவேண்டும்)
(இ) வம்சாவழியாக இலங்கைப் பிரசையாயின் பின்வருவோரின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :—
(i) விண்ணப்பதாரர் :———.
(ii) விண்ணப்பதாரரின் தகப்பனார் :———.
(iii) விண்ணப்பதாரரின் தகப்பன்வழிப் பாட்டன் : ———.
(iv) விண்ணப்பதாரரின் தகப்பன்வழிப் பூட்டன் :———

8. (அ) தற்போதைய முகவரி :———.
(ஆ) தற்போதைய முகவரிக்குக் கிட்டிய பொலிஸ் நிலையம் : ———.

9. (அ) விவாகமானவரா ஆகாதவரா ? :————.
(ஆ) நீர் வைப்பாட்டி வைத்திருக்கின்றீரா ? :————.

10. எந்த வகுப்புச் சித்தியடைந்திருக்கின்றீர் :————. (என்ன மொழியில் என்பதைக் கூறி சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

11. (அ) வண்டி செலுத்தும் உத்தரவுச் சீட்டு இலக்கம் :————.
(ஆ) எந்தவிதமான வாகனங்கள் ஓட்டுவதற்கு அனுமதிக்கப் பட்டிருக்கின்றது :————.
(இ) பஸ் வண்டிகள், லொறிகள் போன்ற பாரமுள்ள வாக னங்களைச் செலுத்த உமது உத்தரவுச் சீட்டு விஸ்தரிக்கப் பட்டுள்ளதா ? அப்படியாயின் எத்திகதி தொடக்கம் : ————.

12. மோட்டார் பொறிநுட்பம் பற்றிய அறிவு ஏதாவது உமக் குண்டா :————.

13. வேறு ஏதாவது விசேட தகைமைகள் :————.

14. தற்போதைய தொழில் :————.

15. அரசாங்கத்தில் எப்பொழுதாவது சேவை புரிந்திருக்கின் றீரா ? அப்படியாயின், சேவையாற்றிய காலம், திணைக் களம், வகித்த பதவி, எச்சந்தர்ப்பங்களில் அத்திணைக் களத்தைவிட்டு விலகினீர், போன்ற விபரங்களைக் கொடுக் கவும் :————.

16. எந்த ஒரு காப்புறுதிக் கம்பனியாவது உம்மை காப்புறுதி செய்ய எப்பொழுதாவது மறுத்ததுண்டா ? :————.

17. இரண்டு சான்றுரைப்போர்களின் பெயர்களையும் விலாசங் களையும் தருக :————.

18. (அ) இலங்கை பொலிஸ் சேவையில் முன்னர் எப்பொழுதா வது கொஸ்தாப்புமார் அல்லது சாரதி பதவிக்கு விண் ணப்பித்திருக்கின்றீரா ? (அப்படியாயின் அதன் முடிவு என்ன ? முன் தொடர்பைக் குறிப்பிடவும்) :————.
(ஆ) பொலிஸ் சேவையில் நீர் முன்னர் இருந்திருக்கின் றீரா ? :————.

19. நீர் அல்லது உமது சுற்றத்தாரில் யாராவது குற்றத்தில் சிக்கியோ, அழைப்புக் கட்டளையிடப்பட்டோ, குற்றம் சாட்டப்பட்டோ அல்லது குற்றவாளியெனக் காணப் பட்டோ இருக்கின்றீர்களா ? (அப்படியாயின் அவ்விபரங் களைக் கொடுக்கவும்) :————.

மேலே கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மை யானவையெனவும் சரியானவையெனவும் இத்தால் உறுதிப்படுத்து கின்றேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

6-21—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76.

---

எண் : பொ.நி./3/438

## கல்வி அமைச்சு

### வாணிகவியல் சிரேட்ட போதனாசிரியர் பதவி

கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி நிலையங்களில் வாணிகவியல் சிரேட்ட போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், கீழ்க்காணும் மாதிரிப் படிவமுறையில் தயாரிக்கப்பட்டு 1973 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக் கக்கூடியதாக "செயலாளர் (பொது நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு பதி வுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். காகித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "வாணிகவியல் சிரேட்ட போதனாசிரி யர் பதவி" எனத் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவிகள் நிரந்தரமானவை. நியமனங்கள் சேமலாப நிதி அடிப்படையில் அமையும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் தனது சம்பளத்தில் 6% த்தை அரசாங்க சேவை சகாயநிதிக்குச் செலுத்த வேண் டும். இதற்கான அரசாங்கத்தின் உதவு தொகை 9% ஆகும். நிய மனங்கள் சாதாரணமாக 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும். எனினும், நிரந்தரமானதும் உபகாரச் சம் பள உரித்துடையதுமான ஒரு பதவியை ஏற்கனவே வகிக்கும் ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படுமிடத்து அவருடைய உப காரச் சம்பள உரிமைகள் பாதுகாக்கப்படுவதுடன் அவர் ஒரு வருட காலத்துக்குப் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படு வார்.

3. **தகவுத்திறன்.**—விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் பின் வரும் தகைமைகளுடையவரெனத் திருப்தியான முறையில் நிரு பிக்க வேண்டும்.

(i) 1973 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29 ஆந் திகதியன்று 45 வயதுக்கு மேற்படாதவராயும் 30 வயதுக்குக் குறை யாதவராயும் இருக்க வேண்டும். (இவ்வயதுக் கட்டுப் பாட்டின் மேலெல்லை ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு அமையாது).

(ii) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவ ராய் இருக்க வேண்டும்.

(iii) (அ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங் கப்படும் வாணிகவியல் அல்லது பொருளியல் பட் டம் பெற்றிருப்பதுடன் செயல்முறை/கற்பித்தல் அல்லது இவ்விரு வகையினதான 5 வருட அனுப வம் பெற்றிருக்க வேண்டும்; **அல்லது**

(ஆ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப் படும் வாணிகவியல் தகுதித் தேர்வுச் சான்றிதழ் பெற்றிருப்பதுடன் செயல்முறை/கற்பித்தல் அல் லது இவ்விரு வகையினதான 5 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்; **அல்லது**

(இ) வித்தியோதய பல்கலைக்கழகத்தால் தொழில் நிர் வாகத்தில் வழங்கப்படும் விசேட பட்டம் பெற்றி ருப்பதுடன் செயல்முறை/கற்பித்தல் அல்லது இவ் விரு வகையினதான 5 வருட அனுபவம் பெற்றி ருக்க வேண்டும்; **அல்லது**

(ஈ) சமமான அல்லது உயர்ந்த தகைமைகளும் செயல் முறை/கற்பித்தல் அல்லது இருவகையினதான 5 வருட அனுபவமும் பெற்றிருக்க வேண்டும்.

(iv) சிங்களத்தில்/தமிழில் கற்பிக்கக்கூடியவராய் இருத்தல் வேண்டும் அல்லது நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சிங்களத்தில்/தமிழில் கற்பித்தற்கான தேர்ச்சி பெற வேண்டும்.

**குறிப்பு.**—மேலுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளதற்கமைய தொழில்நுட்ப நிலையங்களில் போதனாசிரியர்களாக நியமனங்கள் ஏற்கனவே வகிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

4. **சம்பள அளவுத்திட்டம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வரு டாந்தச் சம்பள அளவுத் திட்டம் ரூ. 7,500—180/3—240/6— 9,480. ரூ. 8,280 க்குமுன் வினைத்திறமைத் தடை ஒன்றுண்டு. 5 வருடத்துக்குக் குறைந்த அனுபவம் பெற்றுள்ள விண்ணப்ப தாரி ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து, வேண்டிய அனுபவத் தைப் பெறும்வரை பதில் கடமை புரிபவராக திரட்டிய மாறாத வருடாந்தச் சம்பளம் ரூ. 7,500 உடன் நியமிக்கப்படுவார். (1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத் திட்டம் பின் வருமாறு :—ரூபா 4,800—180/3—240/6—ரூ. 6,780)

5. அரச சேவையிலுள்ள, தகைமையுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்படும் திகதிக்குப் பின்னர் பெற்றுக்கொள்ளப் படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விதிக்கப் படும் திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளப் படும் எவ்விண்ணப்பமும் விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டனவென்றும், நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு அவர் சிபார்சு செய்தாலன்றி, ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. எனினும், ஒவ்வொரு விண்ணப்ப தாரியும் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை விதிக்கப்படும் திகதிக்கு முன் இவ்வமைச்சுக்கு நேரே அனுப்ப வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத் தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு.கு.—சமயதீட்சைச் சான் றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலை களுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப் பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) கல்வித் தராதரப் பத்திரங்கள்.

(இ) உயர்தொழில்/தொழில்நுட்பத் தராதரப் பத்திரங்கள்.

(ஈ) விண்ணப்பதாரியின் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் மூன்று சமீபகால நற்சாட்சிப் பத்திரங்கள். (அரசினரின் கீழ் ஏற்கனவே சேவையிலுள்ளவர்களைப் பொறுத்தளவில் இவை சமர்ப்பிக்கப்பட வேண்டியதில்லை)

7. விண்ணப்பங்களும் ஏனைய உரிய சாதனங்களேனும் கடிதங்களேனும் இவ்வமைச்சின் செயலாளரின் உத்தியேக விலாசத்துக்கே அனுப்பப்பட வேண்டும்; எக்காரணத்தையிட்டும் அவைகள் எவ்வுத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படலாகா.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள; அவற்றைப் பார்க்க.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக்கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள், கல்வி அமைச்சின் செயலாளருக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

பொது நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு, மலாய் வீதி,
கொழும்பு 2, 29.8.1973.

**விண்ணப்ப மாதிரிப் படிவம்**

(8½" × 13½" அளவு அரைத்தாள்களில் தயாரிக்கப்பட வேண்டியது)

கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி நிலையங்களில்
வாணிகவியல் சிரேட்ட போதனாசிரியர் பதவி

1. பெயர் (முதலெழுத்துகளுடன்) திரு/திருமதி/ செல்வி :————.

2. முழுப்பெயர் :————.

3. உத்தியோக முகவரி :————.

4. சொந்த முகவரி :————.

5. (அ) இலங்கையரா ?:————.
(ஆ) அங்ஙனமாயின், வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா ? :————.

6. பிறந்த திகதி :————.
வரு :———— மாதம் :———— நாள் :————.

7. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ளபடி சரியான வயது :—
வருடம் :———— மாதம் :———— நாள் :————

8. தற்போதய பதவி பற்றிய விபரங்கள் :—
(அ) பதவி :————.
(ஆ) நிரந்தரமா தற்காலிகமா ? :————.
(இ) உபகாரச் சம்பள உரித்துடையதா அற்றதா :————.
(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா ? :————.
(உ) திணைக்களம் :————.
(ஊ) நிலையம்/வேலை இடம் :————.
(எ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் :————.
(ஏ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டத்திலான தற்போதய படி :————.

9. கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் :—

| பரீட்சை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

10. உயர்தொழில்/தொழில்நுட்பத் தகைமைகள் பற்றிய விபரங்கள் :—

| தராதரப் பத்திரம் | வழங்கியவர் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

11. பொதுக் கல்வி கற்ற நிலையங்கள் :—

| நிலையம் | வகுப்பு | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |

12. தொழில்நுட்ப/உயர்தொழில் கல்வி கற்ற நிலையங்கள் :—

| நிலையம் | பின்பற்றிய பயிற்சி நெறி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

13. முன்னைய நியமனங்கள் (காலவரன் ஒழுங்கில் சுருக்கமாகக் கொடுபடவேண்டியது) :—

| திணைக்களம் | நிலையம்/வேலைஇடம் | பதவி | நிரந்தரமா தற்காலிகமா | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |

14. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டதா ? :————.

(அங்ஙனமாயின் விபரங்களைக் கொடுக்கவும்)

15. விண்ணப்பதாரி அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டவரா ? :————.

(அங்ஙனமாயின் விபரங்கள் கொடுக்கவும்)

16. விண்ணப்பதாரி பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு ? :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரார்வேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி ————.

6-88—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76.

### அரசாங்க ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி பகுதிநேர விரிவுரையாளர்களுக்கான பதவி வெற்றிடங்கள்

அரசாங்க ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியில் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் பகுதிநேர விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமைகளேயுடைய ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்கள் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு, அதிபர், ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி, பண்டாரநாயகாபுரம், இராஜகிரியா எனும் முகவரிக்கு 1973 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ந் திகதிக்கு முன்னரோ அல்லது அன்றோ கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

#### I. ஆயுள்வேத பிரிவுக்கான பகுதிநேர ஆங்கிலமொழி விரிவுரையாளர் பதவி

**கட்டணம்.**—ஒரு மணித்தியால விரிவுரைக்கு ரூபா 10/-

**வயது.**—1973 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ந் திகதி 55 வயதிற்கு மேற்படாதவராயிருத்தல் வேண்டும்.

**கல்வித் தகைமைகள்**

(அ) ஆங்கில மொழியை ஒரு பாடமாகக் கொண்ட பீ. ஏ. பட்டதாரியாகவோ அல்லது ஆங்கில மொழியில் ஆசிரியப் பயிற்சி பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

(ஆ) சிங்கள மொழிமூலம் ஆங்கில மொழியைப் பயிற்றுவதில் பயிற்சியுடையவராக இருத்தல் வேண்டும்.

**சேவை நிபந்தனைகள்**

(i) நியமனம் தற்காலிகமானது ;

(ii) பொதுவாக கிழமையில் 5 மணித்தியாலங்கள் விரிவுரை வகுப்புகள் நடாத்தப்படுவதுடன் அவை கல்லூரி நாட்களில் மாலை 4.00 மணியிலிருந்து 5.00 மணியுமாயிருக்கும்.

**சேவைக்கு சேர்த்தல்**

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகுதியுடைய விண்ணப்பக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

#### II. ஆயுள் வேதப் பிரிவுக்கான பகுதிநேர ஹிந்தி மொழி விரிவுரையாளர் பதவி

**கட்டணம்.**—தற்பொழுது ஒரு மணித்தியால விரிவுரைக்கு ரூபா ரூபா 5/-.

**வயது.**—1973 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 24 ந் திகதி 55 வயதிற்கு மேற்படாதவராயிருக்க வேண்டும்.

**கல்வித் தகைமைகளும் பிற தகைமைகளும்**

(அ) ஹிந்தி மொழியை ஒரு பாடமாகக் கொண்ட பீ. ஏ. பட்டதாரியாகவோ ;

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு கல்விநிறுவனத்தின் பீ. ஏ. பட்டத்துக்கு சமானமான வேறு பட்டம் பெற்றவராகவோ ;

(இ) சிங்கள மொழிமூலம் ஹிந்தி மொழியைப் பயிற்றுவதில் அனுபவமுள்ளவராகவோ இருத்தல் வேண்டும்.

**சேவை நிபந்தனைகள்**

(i) நியமனம் தற்காலிகமானது.

(ii) பொதுவாக கிழமைக்கு 5 மணித்தியாலங்கள் விரிவுரை வகுப்புகள் நடத்தப்படுவதுடன் அவை கல்லூரி நாட்களில் மாலே 4 மணியில் இருந்து 5 மணிவரையுமாயிருக்க வேண்டும்.

**சேவைக்குச் சேர்த்தல் :**

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகுதியுடைய விண்ணப்பகாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

#### III சித்த பிரிவுக்கான பகுதிநேர சமஸ்கிருத விரிவுரையாளர் பதவி

**கட்டணம்.**—தற்பொழுது மணித்தியால விரிவுரைக்கு ரூபா 5/-

**வயது.**—1973 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ந் திகதி 55 வயதிற்கு மேற்படாதவராயிருக்க வேண்டும்.

**கல்வித் தகைமைகளும் பிற தகைமைகளும்**

(அ) சமஸ்கிருத மொழியை ஒரு பாடமாகக் கொண்ட பீ. ஏ. பட்டதாரியாகவோ ;

(ஆ) தமிழ்மொழி மூலம் சமஸ்கிருதமொழியை பயிற்றுவிப்பதில் அனுபவமுள்ளவராகவோ இருத்தல் வேண்டும்.

**சேவை நிபந்தனைகள்**

(1) நியமனம் தற்காலிகமானது.

(ii) பொதுவாக கிழமையில் 10 மணித்தியாலங்கள் விரிவுரை வகுப்புகள் நடத்தப்படுவதுடன் அவை கல்லூரி நாட்களில் பிற்பகலில் தீர்மானிக்கப்படும் கால அட்டவணையின் படியும் இருக்க வேண்டும்.

**சேவைக்குச் சேர்த்தல்**

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகுதியுடைய விண்ணப்பகாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

கே. ஜீ. பி. ஜயதிலக,
அதிபர்.

அரசினர் ஆயுள்வேதக் கல்லூரி,
பண்டாரநாயக்கபுரம்,
இராஜகிரிய,
7 செப்டம்பர் 1973.

மாதிரி விண்ணப்பப் படிவம்

ஆயுள்வேத வைத்தியக் கல்லூரியில் ஆங்கிலமொழி (சிங்கள மொழி மூலம்) ஹிந்தி (சிங்கள மொழிமூலம்) சமஸ்கிருதமொழி (தமிழ் மொழி மூலம்) ஆகியவைகளை பயிற்றுவதற்கான பகுதி விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பப்படிவம்.

முழுப்பெயர் :————.

முகவரி :————.

பிறந்த திகதியும் இடமும் :————.

இனம் :————.

கல்வித்தகைமைகளும் பிற தகைமைகளும் (பயிற்றுவதில் உள்ள அனுபவம்) :————.

வேறு காரணங்கள் :————.

இந்த விணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் அத்தாட்சிப் படுத்துகிறேன். இங்கு கொடுக்கப்பட்ட விபரங்கள் ஏதாவது தவறானதாக அல்லது பிழையானதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட முன் காணப்பட்டால் தகைமை நீக்கத்திற்கும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின் கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடெதுவுமில்லாப் பதவி நீக்கத்திற்கும் ஆளாவேன் என்பதை நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

2-89—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

---

இல. வெ. மு. 3/512.

### ஜேர்மனிய ஜனநாயகக் குடியரசுப் புலமைப் பரிசில்கள்—1973 ஆம் ஆண்டு

மேற்குறித்த விடயம் சம்பந்தமாக 17.8.73 அன்று வெளியான 73 ஆம் இலக்க வர்த்தமானியில் காணப்படும் அறிவித்தலின் 3 (iii) ஆம் பந்தி, அங்கு கொடுபட்டுள்ள க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சைப் பாடங்களுடன் "தாவரவியலேயும் விலங்கியலேயும்" சேர்த்துக் கொள்வதன் மூலம் திருத்தி அமைக்கப்படுகிறதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 14.9.1973 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1973 ஓகஸ்ற் 24.

9-79—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

குருநாக்கல் மாவட்டத்தில் தம்பதெனி உடுக்கக கோறளை தெற்கு—அளவைப் பிரிவிற்கு பிறப்பு இறப்பும்; தம்ப தெனி ஹத்பத்து பிரிவிற்கு விவாக (கண்டியர், பொது) பதிவாளர் பதவி

தம்பதெனி உடுக்கக கோறளை தெற்கு—அளவைப் பிறப்பு, இறப் புப் பதிவுப் பிரிவில் நிரந்தரமாகக் குடியிருக்கின்ற, சிலகாலமாக வசிக்கின்ற அல்லது அவ்விடப் பொது மக்களால் அங்கீகரிக்கப் படக்கூடிய ஆண் பெண் இருபாலரும் விண்ணப்ப முடிவு திகதி யன்று இருபத்தொரு வயதிற்குக் குறையாதவர்களாயின் மேற் படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவை யில் உள்ளவர்களாயின் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வி முதலிய தராதரங்களும், நிபந்தனைகளும் இந்த அலுவலகத்திலும், காரி யாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூர் ஆட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதி மன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் நிலையத்திலும், கூட்டுறவுச் சங்க அலுவலகங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய நியம விண்ணப்பப் படிவங்களில் நிரப்புவதோடு 1973 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாக எனக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

சந்திரானந்த த சில்வா,
மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
குருநாகல்,
1973 ஆம் ஆண்டு ஆகஸ்டு மீ 23 ஆம் உ.

9-60/1—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

---

குருநாக்கல் மாவட்டத்தில் தம்பதெனி உடுக்கக கோறளை வடக்கு—நாறம்மலைப் பிரிவிற்கு பிறப்பு இறப்பும், தம்பதெனி ஹத்பத்து பிரிவிற்கு விவாக (கண்டியர், பொது) பதிவாளர் பதவி

தம்பதெனி உடுக்கக கோறளை வடக்கு—நாறம்மலைப் பிறப்பு, இறப்புப் பதிவுப் பிரிவில் நிரந்தரமாகக் குடியிருக்கின்ற, சிலகால மாக வசிக்கின்ற அல்லது அவ்விடப் பொது மக்களால் அங்கி கரிக்கப்படக்கூடிய ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்குக் குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் உள்ளவர்களாயின் இவ்வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வி முதலிய தராதரங்களும், நிபந்தனைகளும் இந்த அலுவலகத்திலும், காரி யாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூர் ஆட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதி மன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும் பொலிஸ் நிலையத்திலும், கூட்டுறவுச் சங்க அலுவலகங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய நியம விண்ணப்பப் படிவங்களில் நிரப்புவதோடு 1973 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ம் நாளன்று அல்லது அதற்கு முன்பாக எனக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

சந்திரானந்த த சில்வா,
மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
குருநாக்கல்,
1973 ஆம் ஆண்டு ஆகஸ்டு மீ 23 ஆம் உ.

9-60/2—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

இல.: 1/23/2/23(G)

பொது எழுதுநர் சேவை II வகுப்பின் "அ" பிரிவிற்கு நியமிப்ப தற்காய பரீட்சை—1973 நவம்பர் மாதம்

**பரீட்சைத் திகதி.**—பொது எழுதுநர் சேவையின் II ஆம் வகுப் பின் "அ" பிரிவிற்கு நியமிப்பதற்காய தகுதிப் பரீட்சை ஒன்று சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் கச்சேரி நிலையங்கள் யாவற் றிலும் பரீட்சை ஆணையாளரினால் 1973 நவம்பர் மாதம் 24 ஆம் திகதியன்று நடாத்தப்படும்.

எந்தக் கச்சேரி நிலையத்திலும் போதியளவு பரீட்சார்த்திகள் தோன்றாவிடின் அந்நிலையம் நிராகரிக்கப்படும்.

2. **முடிவுகளை வெளியிடல்.**—சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் ஸ்ரீ லங்கா குடியரசின் செய்திமடலில் வெளியிடப்படும்.

3. **வேதனமும் சேவை நிபந்தனைகளும்.**—1971 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் தேதிய இல. 14,977/9 இக் கொண்ட இலங்கை அரசாங்க அதிவிசேடச் செய்திமடலில் வெளியிடப்பட்ட பொது எழுதுநர் சேவைபற்றிய பிரமாணக் குறிப்பை பார்க்க.

4. **தகவுத்திறன்.**—இப்பரீட்சை, பொது எழுதுநர் சேவையின் II ஆம் வகுப்பின் "ஆ" பிரிவிலுள்ளவர்களும் 1973 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 1 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ தமது நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளவர்களும் வேலையும் ஒழுக்கமும் திருத்திகரமாகவுள்ளவர்களுமான எழுதுநர்களுக்கு மட்டுமுரியதாகும். இதன் பொருட்டு, பொது எழுதுநர் சேவை யின் பொது எழுதுநர் வகுப்பில் ஓர் உத்தியோகத்தர் உறுதிப் படுத்தப்பெற்றிருந்து, அத்தகைய உத்தியோகத்தர் 1971 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் தேதியன்று பொது எழுது நர் வகுப்பில் இருந்திருக்குமிடத்து, II ஆம் வகுப்பின் "ஆ" பிரிவில் உறுதிப்படுத்தப்பெற்றவராகவே கருதப்படுவர். அவ் வாறே, அரசாங்க மாவட்ட எழுதுநர் சேவையிலோ மருவிய எழுதுநர் சேவையிலோ எழுதுநராக ஒருத்தியோகத்தர் உறுதிப் படுத்தப்பெற்றிருந்து, அத்தகைய உத்தியோகத்தர் 1964 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 1 ஆந் தேதியன்று பொது எழுதுநர் சேவையின் பொது எழுதுநர் வகுப்பில் சேர்க்கப்பட்டும், 1971 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் தேதியன்று அவ் வகுப் பில் இருந்திருக்குமிடத்து, II ஆம் வகுப்பின் "ஆ" பிரிவில் உறுதிப்படுத்தப்பெற்றவராகவே கொள்ளப்படுவர்.

5. **விண்ணப்பங்கள்.**—(i) இப்பரீட்சைக்கு அனுமதிப்பதற்குரிய விண்ணப்பத்தின் மாதிரிப் பத்திரம் சிங்கள மொழியில் காணப் படும் விளம்பரத்தின் கீழ் உள்ளது. விண்ணப்பகாரர்கள் தமது விண்ணப்பங்களை முழுத் தாளின் அரைத்தாளில் (வேறு எந்த அளவுப் பத்திரத்திலுமின்றி) தயாரித்தல் வேண்டும். இந்நோக்கத் திற்கு ஒரு தாளையே உபயோகித்தல் வேண்டும். இப்பத்திரங் களைத் தட்டெழுத்திலும் தயாரிக்கலாம்; ஆனால் அது பரீட்சார்த் தியின் சொந்தக் கையெழுத்தில் தெளிவாகவும் சரியாகவும் நிரப் பப்படல் வேண்டும்.

அரசகரும மொழிக் கொள்கையின் பொருட்டு "புதிதாகச் சேர்ந்தோர்" எனக் கருதப்படும் உத்தியோகத்தர் தமது விண் ணப்பப் படிவங்களை அரச கரும மொழியில் தயாரித்து அம் மொழியில் நிரப்புதல் வேண்டும். எனினும், முன்னர் சேர்ந்த உத்தியோகத்தர்கள் விண்ணப்பப் படிவங்களை ஆங்கிலத்திலோ, அரசகரும மொழியிலோ தயாரித்து அம்மொழியில் நிரப்பும் விருப்புரிமையுடையவராவர்.

(ii) இப் பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றும் பரீட் சார்த்திகள் பரீட்சைக் கட்டணம் ஏதும் செலுத்த வேண்டிய தில்லை. ஆயினும் பின்னுள்ள அமர்வுகள் விஷயத்தில், அவர்களது விண்ணப்பங்கள், பரீட்சார்த்தியின் முறையான கையொப்பத்தில் பெறுமதி நீக்கம் செய்யப்பட்டுத் திகதியிடப்பட்ட 25 ரூபா பெறு மதியான முத்திரைகளைக் கொண்டதாகவிருக்க வேண்டும். எச்சந் தர்ப்பத்திலும் கட்டணம் மீளளிப்பு செய்யப்படமாட்டாது. இப் பரீட்சைக்குக் கட்டப்பட்ட கட்டணங்கள் வேறேதும் பரீட்சைக்கு மாற்றப்பட முடியாது.

(iii) விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர் மூலம் அனுப்பப் படல் வேண்டும்; அத்துடன் அவர்களின் திருப்திகரமான சேவை பற்றிய சான்றிதழ்களும் அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப் பத்திரமும் எல்லா வகையிலும் பூரணமாகவும் திருப்திகரமானதாகவும் இருக்கின்றதோ எனவும் அவ்விண்ணப் ணப்பப் பத்திரத்துடன் இணைத்துள்ள சான்றிதழ்களில் தாம் கையெழுத்திட்டு இருக்கின்றாரோவெனவும் திணைக்களத் தலைவர் கள் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். தகுதி பெற்ற பரீட் சார்த்திகளின் விண்ணப்பங்களை அவர்கள் பதிவுத் தபால் மூலம் பரீட்சை ஆணையாளர், கொழும்பு 2 என்னும் முகவரிக்கு 1973, ஒற்றோபர் மாதம் 15 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அனுப்புதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. **பரீட்சைக்கு அனுமதி.**—(i) அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்குரிய பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை ஆணையாளர் அனுமதி அட்டைகள் வழங்குவர். இப்பரீட்சைக்குத் தோன்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வை உத்தியோகத்தர்களுக்கு அனுமதி அட்டைகளைக் காட்டுதல் வேண்டும். இவ்வனுமதி அட்டைகளின்றிப் பரீட்சைக்கு அவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(ii) தனித்தனியாகப் பரீட்சார்த்திகளுக்கு நேரசூசி வழங்கப்படமாட்டாது. இவ்வறிவித்தலின் ஒன்பதாம் பந்தியில் கொடுக்கப்பட்டிருக்கும் நேரசூசியைப் பரீட்சார்த்திகள் கவனித்தல் வேண்டும்.

(iii) பரீட்சை ஆணையாளரினால் பரீட்சை நடாத்துவதைப் பற்றி விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுண்டவராவர். இவ்விதிகளையும் பிரமாணங்களையும் மீறுபவர்கள் அன்றேல் விதிக்கப்படும் எந்தத் தண்டனைக்கும் ஆளாவர்.

(iv) இவ்வறிவித்தலின் முடிவில் பரீட்சார்த்திகளின் விதிகளும் பிரமாணங்களும் வேறாக அச்சிடப்பட்டுள்ளன.

7. **அரசாங்க உத்தியோகத்தர் பரீட்சை எடுப்பதற்கு விடுதலை.**—பரீட்சை ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்குரிய உத்தியோகத்தர்களுக்கு, திணைக்களத் தலைவர்கள் அவ்வுத்தியோகத்தர்களுக்குப் பரீட்சை எடுப்பதற்காகக் கடமை விடுதலை கொடுத்தல் வேண்டும். போக்குவரத்துச் செலவு கொடுக்கப்படமாட்டாது.

8. **பரீட்சைத் திட்டம்.**—பரீட்சைக்குரிய பாடங்களும் அவற்றுக்குள்ள புள்ளிகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. 1971 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 1 ஆந் தேதியன்றும் அதற்குப் பின்னரும் பொது எழுதுநர் சேவைக்கு நியமிக்கப்படுபவர்களுக்கு இப்பரீட்சையில் தட்டெழுத்தும் ஒரு பாடமாக இருக்கும். எழுத்துத் தாள்கள் யாவற்றிலும் கூடாத கையெழுத்திற்கும் எழுத்துப்பிழைகளுக்கும் புள்ளிகள் கழிக்கப்படும். தெளிவற்ற கையெழுத்துள்ள பரீட்சார்த்திகள் தகைமை நீக்கம் பெறுவதற்கும் ஆளாவர்.

புள்ளிகள்

1. கணக்குகள். (வினாத்தாள்—1½ மணி)
இவ்வினாத்தாள் கணக்குகளிலும், கூட்டலெண்களிலும் (ரொட்ஸ்) வினாக்களைக் கொண்டிருக்கும். இலக்கங்களைக் கையாள்வதில் உள்ள செம்மையையும் கணக்குகளின் அடிப்படையான நியதிகளின் அறிவையும் பரீட்சிப்பதற்கானது. ... 100

பாடத்திட்டம்

(அ) கூட்டல் எண் (ரொட்ஸ்) :
குத்தெதிரானதும் கிடையானதுமான 6 அல்லது 8 நிரல்களையுடைய ஒரு தொடரான எண்களை (7 இலக்கங்களுக்கு மேற்படாத) கூட்டுவதிலும் கழித்தலிலும் உள்ள வேகத்தையும் செம்மையையும் பரீட்சிப்பதற்கானது.

(ஆ) இரட்டைப் பதிவுமுறைக் கணக்குப் பதிவியல் :
வியாபாரத் தொழிலில் உள்ள தனி வியாபாரிக்குப் பிரயோகிக்கப்படும் இரட்டைப் பதிவுமுறைக் கணக்குப் பதிவியலின் அடிப்படைத் தத்துவங்கள், மூலப்பதிவேட்டுக்களினதும் துணையேடுகளினதும் செய்முறைப் பிரயோகங்கள். அதாவது—பேரேடுகள், நாட்குறிப்பு, நிரன்முறைக் காசேடு, சில்லறைக் காசேடு, ஒழுங்குபடுத்தும் பேரேடுகளை உள்ளடக்கிய பிற துணையேடுகளும், வங்கிக் கணக்கிணக்கம், வழுக்களைத் திருத்தலும், பரீட்சைமீதி தெரிதலும், முற்பணம் கொடுத்தல், நின்ற கொடுக்குமதிகள், பெறுமானத் தேர்வு, பொறுப்பொதுக்கம், காப்பொதுக்கல்கள் முதலியவற்றிற்கான இலகுவான செம்மையாக்கல்களை உள்ளடக்கிய வியாபார இலாப நட்டக் கணக்குகளையும் ஐந்தொகையையும் தயார் செய்து சமர்ப்பித்தலும்.

(இ) ஆரம்ப வணிக, வங்கிச் சொற்றொகுதிகளில் அறிவு.

புள்ளிகள்

(2) பிரமாணங்கள், நடவடிக்கைகள், அலுவலக முறைகள் (இரண்டு மணித்தியாலம்) ஓர் உத்தியோகத்தர் எழுது வினைஞரின் தகுதியையும் உபயோகத்தையுமுடையாரோ எனச் சோதிக்கும் முறையில் இப்பத்திரம் அமையும். உத்தியோக பூர்வமான கடிதத்தொடர்புகளைச் சுருங்கக் கூறுமாறும் ஒரு கட்டளைப்பாடு மாதிரி கடிதமொன்றை எழுதுவதற்கும் சுட்டெண் முறை, கோவைப் படுத்தல் முதலியன பற்றிய அறிவைக் காட்டவும், எழுத்தில் எடுத்துரைக்கும் ஆற்றலைத் தெரிவிக்குமாறும் வேண்டப்படுவர் ... 200

குறிப்பு.—(i) எழுதுவினைஞர் சேவையில் சேர்வதற்குரிய போட்டிப் பரீட்சையை எந்த மொழியில் எடுத்தனரோ அம்மொழியிலேயே இரு பத்திரங்களுக்கும் விடை தருதல் வேண்டும். போட்டிப் பரீட்சையின்றி முதலில் தெரிவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் அச்சேவையில் சேர்வதற்குத் தகுதி பெற்ற அந்த மொழியிலேயே பரீட்சையெழுதுதல் வேண்டும். தாம் விரும்பினால் அவர்கள் அரசகரும மொழியில் (சிங்களம்) இரு பத்திரங்களுக்கும் விடை தரலாம். ஆங்கில மொழி மூலம் சேர்க்கப்பட்டு அரசகரும மொழிக் கொள்கையின் பொருட்டு "முன் சேர்ந்தோர்" எனக் கருதப்படும் உத்தியோகத்தர்கள் இவ்விரு பத்திரங்களுக்கும் முறையே சிங்களத்திலோ ஆங்கிலத்திலோ விடையெழுதலாம்.

(ii) இப்பாடங்களில் தகைமை பெறுவதற்கு ஒவ்வொரு பத்திரத்திலும் அப்பத்திரத்திற்குரிய புள்ளிகளில் ஆகக் குறைந்தது நூற்றுக்கு 33 வீதம் புள்ளிகளையும் இரு பத்திரங்களுக்குரிய புள்ளிகளில் மொத்தம் நூற்றுக்கு 40 வீதப் புள்ளிகளையும் பெறல் வேண்டும்.

(3) சிங்களம் அல்லது தமிழ்—

புள்ளிகள்

(அ) 1½ மணித்தியாலத்துக்கு எழுத்துப் பரீட்சை ... 100

(ஆ) வாய்மொழிப் பரீட்சை ... ... 100

எழுத்துப் பரீட்சை பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும் :—

(i) எளிய உரைநடைப் பகுதிகளை விளங்கல்.

(ii) கீழ்வரும் கட்டுரை முறைகளில் ஒன்றோ அதற்குமேலாகவோ விவரணம், உரையாடல், கடிதம் எழுதல்.

(iii) (அ) சிங்களத்தில்/தமிழில் வசனங்கள் மொழிபெயர்த்தல்.
(ஆ) எளிய உரைநடைப்பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல்.

(iv) சொற்கள், சொற்றொடர்கள், வசனங்கள் முதலியவற்றின் கருத்தும், தொழில் தொடர்பு ஆகியனவும் பிழைகள் முதலியனவும்.

குறிப்பு.—(i) இப்பாடத்திலுள்ள பரீட்சையானது குறித்த மொழியில் பரீட்சார்த்தியொருவருக்கு அன்றாடத்தேவைக்குரிய அறிவுண்டோ என அறியும் தரத்ததாய் அமையும்.

(ii) மேற்போந்த குறிப்பு(ii) இல் விதிக்கப்பட்டுள்ள தேவைகளைத் திருத்தி செய்யும் பரீட்சார்த்திகள் இப்பாடத்திலான ஒரு வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அத்தகைய பரீட்சார்த்திகள் தகைமை பெறுவதற்குச் சிங்களத்தில் அல்லது தமிழில் உள்ள எழுத்துப் பரீட்சைக்கும் வாய் மொழிப் பரீட்சைக்கும் ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் ஆகக் குறைந்தது 35 சத வீதம் புள்ளிகளைப் பெறல் வேண்டும்.

(iii) (1) கணக்கு, (2) பிரமாணம், நடவடிக்கை, அலுவலக முறைகள் ஆகிய இரு வினாப் பத்திரங்களுக்கும் சிங்களத்தில் அல்லது தமிழ் மொழியில் விடையளிக்கும் பரீட்சார்த்திகள் சிங்களம் அல்லது தமிழ் என்னும் 3 வது பாடத்தினின்றும் விலக்குப் பெறுவர்.

(iv) கீழே கூறப்படும் தகைமைகளில் ஒன்றையேனுமுடைய பரீட்சார்த்திகளும் சிங்களம் அல்லது தமிழ் பாடத்தினின்றும் விலக்குப் பெறுவர் :

சிங்களத்திலிருந்து விலக்கு—

(அ) பொதுத் திறைசேரியின் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையின் (உயர்தரம்) சித்தியெய்தியிருத்தல் ;

(ஆ) சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திரம் (சிங்களம்) ;

(இ) சிங்களமொழி, தற்காலச் சிங்களம், பழைய சிங்களம் ஒரு பாடமாக சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (ஆங்கிலம்) சித்தியெய்தியிருத்தல் ;

(ஈ) சிங்கள மொழியில் (அ) பாடத் திட்டத்தில் அல்லது (ஆ) பாடத்திட்டத்தில் இலங்கைக் கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (சாதாரணதரம்) சித்தியெய்தியிருத்தல் ;

(உ) 1964.3.23 ஆம் திகதிய 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையின் iv ஆம் தரத்தில் சித்தியடைந்திருத்தல்

தமிழிலிருந்து விலக்கு—

(அ) பொதுத் திறைசேரியின் தமிழ்த் தேர்ச்சிப் பரீட்சையில் (உயர்தரம்) சித்தியெய்தியிருத்தல் ;

(ஆ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (தமிழ்) ;

(இ) தமிழ்ப் பாஷை, ஒரு பாடமாக சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (ஆங்கிலம்) சித்தியெய்தியிருத்தல் ;

(ஈ) தமிழ் மொழியில் "அ" பாடத்தில் "ஆ" பாடத்திட்டத்தில் இலங்கைக் கல்விப் பொதுத் தராதரப்பத்திரத்தில் (சாதாரணதரம்) சித்தியெய்தியிருத்தல்.

**9. பரீட்சையின் நேரசூசி பின்வருமாறு :—**

மு.ப. 9.00—மு.ப. 11.00—பிரமாணம், நடவடிக்கை, அலுவலக முறைகள்.

பி.ப. 1.00—பி.ப. 2.30—கணக்கு.

பி.ப. 2.45—பி.ப. 4.15—சிங்களம்/தமிழ் (எழுத்துமூல விடைக்கான வினாத்தாள்).

வாய்மொழிப் பரீட்சைக்குத் தகுதிபெறும் எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் அப்பரீட்சைக்குரிய தேதி, நேரம், இடம் ஆகிய வற்றைப் பரீட்சை ஆணையாளர் புறம்பாக அறிவிப்பார்.

**10. ஆளடையாள அட்டைகள்.**—பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் எடுக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளரின் திருப்திக்கமைய தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டப்படுவர். இந்நோக்கத்திற்காகப் பின்வரும் சாதனங்களிலொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) அஞ்சல் மா அதிகாரியால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ;

(ஆ) பரீட்சை தொடங்குவதற்கு மூன்றாண்டுகளுக்கு மேற்படாத காலத்திற்குள் பெறப்பட்ட கடவுச் சீட்டு (பாஸ்போட்) ;

(இ) பரீட்சை தொடங்குவதற்கு முன்னர் மூன்று ஆண்டுகளுக்கு முற்படாமல் அரசாங்க திணைக்களமொன்றின் அதிகாரத்துடன் வழங்கப்பட்ட பரீட்சார்த்தியின் ஒளிப்படம் தாங்கிய சாதனம் அல்லது உத்தரவுச் சீட்டு அல்லது சான்றிதழ் ஏதாவதும் ;

(ஈ) ஒரு கடவுச் சீட்டு அளவு (பாஸ்போட் அளவு) புகைப்படம் (பரீட்சார்த்தியின் கையெழுத்து அதன் பின்புறம் இடப்பட்டு, அக்கையெழுத்தும் புகைப்படமும் பரீட்சார்த்தியினுடையவை என திணைக்கள அதிபராலோ அல்லது அவரிடம் அதிகாரம் பெற்ற ஓர் உத்தியோகத்தராலோ உறுதிசெய்யப்பட வேண்டும். உறுதிப்படுத்துவோரின் பெயரும், பதவியும், திகதியும், முகவரியும் அதில் பொறிக்கப்படவேண்டும். இப் புகைப்படத்தை பரீட்சை மேற்பார்வையாளர் பெற்றுக் கொள்வார்).

பி. எச். சிறிவர்த்தன,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உண்ணாட்டலுவல்கள் அமைச்சின்
செயலாளரும் பதில் அரசாங்கநிருவாகப்
பணிப்பாளர் அதிபதியும்.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு ஓகத்து மீ 28 ந் வ.

மாதிரி விண்ணப்பப் படிவம்

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

**பொது எழுதுநர் சேவை II ஆம் வகுப்பின் “ அ ” பிரிவிற்கு நியமிப்பதற்காய பரீட்சை—1973, நவம்பர் மாதம்**

1. உமது வழமையான கையொப்பம்.:————

(அ) (i) உமது சொந்த பெயர் முதல் எழுத்துக்களுடன் :————.

(ii) முதல் எழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :————. (அச்சு எழுத்துக்களில்)

(ஆ) தற்போதய நியமனம் :————.

(ஈ) அலுவலக முகவரி :————.

2. (i) பிறந்த தேதி :————.

(இ) திணைக்களத்தின் பெயர் :————.

(ii) பால் :————.

3. நீர் கடமையாற்றும் இடத்துக்கு அணித்தாயுள்ள கச்சேரி ஸ்தானம் :————.

4. நீர் இலங்கையரா எனவும், சிங்கள, இலங்கைத் தமிழ் அல்லது பறங்கிய இனத்தைச் சேர்ந்தவரா எனவும் கூறுக :————.

5. (i) பொது எழுதுநர் சேவையின் பொது எழுதுநர் வகுப்பிற்கான நியமனத் தேதி :————.

(அரசாங்க மாவட்ட எழுதுநர் சேவை/மருவிய எழுதுனர் சேவை ஆகியவற்றிலிருந்து பொது எழுதுநர் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்டவரையில் பொது எழுதுநர் சேவைக்கான நியமனத் தேதி 1964, ஒற்ரோபர் 1 ஆந் தேதியாகும்).

(ii) அரசாங்க மாவட்ட எழுதுநர் சேவையில்/மருவிய எழுதுநர் சேவையின் 1964, ஒற்ரோபர் 1 ஆந் தேதியன்றுள்ள சேவைக் காலத்தின் வருட எண்ணிக்கை. ஒன்றிற்கு மேற்பட்ட சேவையிலிருந்தால் ஒவ்வொரு சேவைக் காலப் பகுதியையும் வேறாகத் தருக :————.

(iii) எழுதுநராக நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :—

(அ) பொது எழுதுநர் வகுப்பு :————.

(ஆ) அரசாங்க மாவட்ட எழுதுநர் சேவை :————.

(இ) மருவிய எழுதுநர் சேவை :————.

(iv) (அ) அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்திற்காக நீர் “முன்சேர்ந்தவரா” அல்லது “புதிதாய்ச் சேர்ந்தவரா” :————.

(ஆ) பொது எழுதுநர் சேவைக்கு/அரசாங்க மாவட்ட எழுதுநர் சேவைக்கு/மருவிய எழுதுநர் சேவைக்கு/அல்லது தற்காலிக எழுதுநராக எம்மொழிமூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளீர் ? :————.

6. அறிவித்தலின் பந்தி 8 (3) இன் கீழ் பரீட்சையில் எம்மொழிக்கு தோற்றுகின்றீர்—சிங்களம் அல்லது தமிழ் :————.

7. சிங்களத்திலிருந்து/தமிழிலிருந்து தவிர்க்கப்படுதற்குத் தகவுடையீராயின் அறிவித்தலின் பந்தி 8 (3) இன் (iii) ஆம் அல்லது (iv) ஆம் குறிப்பின்கீழ் தவிர்ப்புக் கோரப்படுகின்றதா என்பதைக் கூறுக. குறிப்பு (iv) இன் கீழ்க் கோரப்படுவதாயின் பின்வரும் தகவலைத் தருக :—

(அ) பரீட்சையின் பெயர் :————.

(ஆ) பரீட்சை வருடமும் மாதமும் :————.

(இ) சுட்டிலக்கம் :————.

(ஈ) சிங்களத்தில்/தமிழில் சித்தியடைந்த பாடம் :————.

(உ) சிங்களத்தில்/தமிழில் தேர்ச்சிப் பரீட்சையின் மொழிமூலமும், நிலையும் அல்லது தரமும் :————.

8. இப்பரீட்சைக்கு முதற்றடவையாகத் தோற்றுகின்றீரா :————.

இப்பரீட்சைக்கு முதற்றடவையாகத் தோற்றுவிடின் ரூபா 25/- பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளதா :—

9. முத்திரைக்கான கூடு.

ரூபா 25/-

**குறிப்பு :** பரீட்சார்த்தி 25 ரூபா பெறுமதியான முத்திரைகளை ஒட்டி அதன்மேல் கையொப்பமிடுவதன்மூலம் பெறுமதி நீக்கம் செய்தல் வேண்டும். முத்திரைகளை ஒன்றன்மேலொன்றாக ஒட்டப்படாது.

என்னால் கொடுக்கப்பட்ட விவரங்கள் யாவும், எனது சிறந்த அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவையென்றும் ஒட்டப்பட்ட முத்திரைகள் முன்னர் பாவிக்கப்படாதனவென்றும், உண்மையான முத்திரைகளென்றும், பரீட்சைப் பிரமாணங்களுக்கு இணங்கி ஒழுகச் சம்மதிக்கின்றேனென்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

————,
பரீட்சார்த்தியின் கையொப்பமும்
திகதியும்
(கீழே குறிப்பைப் பார்க்கவும்)

**குறிப்பு.**—பரீட்சார்த்தி தமது திணைக்களத் தலைவர் முன்னிலையில் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக ஒப்பமிட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் முன்னிலையில் அல்லது கிளைத் தலைவர் முன்னிலையிற் கையொப்பமிடல் வேண்டும்.

அத்தாட்சிப்படுத்தல்

திரு/திருமதி/செல்வி......................எனது அலுவலகத்திற் கடமையாற்றும் உத்தியோகத்தரெனவும் எனக்கு அறிமுகமானவரென்றும், என் முன்னிலையில் 1973 ஆம் ஆண்டு.................... ஆம் மாதம் ............ ஆந் நாள் கையொப்பமிட்டுள்ளாரெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம் :————.

பெயர் :————.

பதவிப் பெயர் :————.

முகவரி :————.

திணைக்களத் தலைவரின் உறுதிப்பத்திரம்

(i) திரு/திருமதி/செல்வி........................ பொது எழுதுநர் சேவை வகுப்பு II, பிரிவு "ஆ" வில் உள்ள எழுதுந ரென்றும் 1973, ......................ஆந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்த லுக்கிணங்க இப்பரீட்சைக்குத் தோற்றத் தகவுடையவ ரென்றும் அவருடைய வேலையும் நடத்தையும் திருப்திகர மானதென்றும்,

(ii) 2 ஆம், 5 ஆம், 7 ஆம், 8 ஆம் கூடுகளிற் கொடுக்கப்பட்ட விவரங்கள் என்னுற் சரிபார்க்கப்பட்டுச் சரியானவை யெனக் காணப்பட்டதென்றும்,

(iii) இவ்வுத்தியோகத்தர் இப்பரீட்சைக்கு முதற்றடவையாகத் தோற்றுகின்ருரென்றும் */இவ்விண்ணப்பம் ரூபா 25/- பெறுமதியான முத்திரைகள் கொண்டுள்ளதென்றும் இத் தால் நான் உறுதிப்படுத்துகிறேன்.

*தேவையற்றதை நீக்குக.

திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவிப் பெயர் :————.

திகதி :————.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ளவேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விருப்பப்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர். அல் லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படு வர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியி லிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப் படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன் படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தைபற்றி அவருடைய மேலதிகாரிக் குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த் தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரி டம் ஒப்படைத்து விடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட் சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடி வானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சாதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபை யால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதி யீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணுது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட் பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்யவேண் டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனே வெளியேயுள்ள பரீட்சார்த்தி களுடனே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட் டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான தேவையுண்டானல் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற் றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்ற மும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப் படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீன மான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட் டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறி தொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தை தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாக கருதப் படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்தி லிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்த கைய விடையெழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானதாகும். இவ்விதிக்கு மாருக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தை யெனக் கருதப்படும்.

7. வினுத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர்; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்த வரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை மேற்பார்வையாளர் பரீட்சை மண்ட பத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினுத் தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணுக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாக கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப்புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப் படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிட வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினுவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல விடயங்களில் விடை எழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாருக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தன மெனக்கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினுக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனே செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளி ருந்தால் சித்திரத்தில் அலங்காரருபச் சித்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அழகிலும் நோக்கத்தி லும் பெரும்பாலும் வேறும் ஒன்றினேடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல் லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப் பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப் பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோ விட கைப்பை, அழகுசெய் செப்பு, பார்சல் முத லியவற்றை, கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதா சிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலிய வற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வை யாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தி யும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினுல் நேர்மையற்ற முறைகளைக் கையாண்ட தாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனல், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டு வரும்பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக் கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக் கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக் கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு :**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன் நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதியைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்கு தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்திற்குத் தோற்றும்பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப் பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணவரேகைத் தாள், பேரேட்டுத் தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையெனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை மேசைமேல் விட்டுவிட வேண்டும். சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர் வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(v) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்படவேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒருகோடு கீறப்படவேண்டும். அல்லது சிலவெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vi) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலது பக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(vii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும், பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டுருபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறு பக்கத்திலும் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(viii) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல்மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(ix) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள், தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(x) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xi) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெற வேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி,
கொழும்பு 2.

9-118—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

## அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

01.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

# "இலங்கைக் குடியரசு வர்த்தமானி"

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. சனிக்கிழமைகளில் மு. ப. 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. சனிக்கிழமைகளில் மு. ப. 11 மணிக்கும், மற்றும்நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்டல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறேக்ரறுல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | | | ரூ. | ச. |
|---|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. | .. | .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன்பகுதி | .. | .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. | .. | .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | .. | .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | | | உள்ளூர் | | | வெளியூர் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. | ச. | | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. | .. | .. | 46 | 0 | .. | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. | .. | .. | 36 | 0 | .. | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் | .. | .. | 43 | 50 | .. | 51 | 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

### தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை | | | தபாற் செலவு (உள்ளூர்) | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ச. | | ரூ. | ச. |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. | .. | 0 | 50 | .. | | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. | .. | 1 | 0 | .. | | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | .. | 0 | 30 | .. | | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | .. | 0 | 60 | .. | | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| செப்தெம்பர் .. | 7.9.73 | வெள்ளி .. | 29.8.73 | புதன் .. | ந. ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி .. | 5.9.73 | புதன் .. | ந. ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி .. | 11.9.73 | செவ்வாய் .. | ந. ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி .. | 19.9.73 | புதன் .. | ந. ப. 12.00 |

எல். டபிள்யு. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சகத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு [illegible] மீ 18 ந் தி.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.